සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இலங்கைச் சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சை – மாதிரி வினாத்தாள்
## Sri Lanka Law College Entrance Examination - Model Paper

**(01) மொழித்தேர்ச்சி (தமிழ்)**
Proficiency (Tamil)

*மூன்று மணித்தியாலம்*
*Three hour*

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்குப் பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✻ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டா.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கும் பக். 3 இலுள்ள புள்ளிக் கோட்டின் மீதும் எழுதுக.**

......................................
**சுட்டெண்**

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்.

**முக்கியம் :**

✻ இவ்வினாத்தாள் **08** பக்கங்களில் **38** வினாக்களைக் கொண்டுள்ளது.

✻ எல்லா வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✻ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.

✻ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✻ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

✻ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

✻ கறுப்பு அல்லது நீல நிறப் பேனைவினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✻ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

✻ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மையைப் பயன்படுத்தல் பென்சில் பயன்படுத்தி அளித்த விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

### பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 13 | |
| 3 | 14 - 23 | |
| 4 | 24 - 35 | |
| 5 | 36 | |
| 6 | 37 | |
| 7 | 38 | |
| 8 | | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாள்களைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

- **1** தொடக்கம் **3** வரையான வினாக்களில் பிழையாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லை அடையாளம் கண்டு அது குறித்து நிற்கும் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**1.** (1) பல்கலைக்கழகம் (2) கலாசாரம் (3) நாகரீகம் (4) சமூகவியல் (.........)

**2.** (1) அங்குரார்பணம் (2) புனருத்தாரணம் (3) தொழினுட்பம் (4) புனர்நிர்மாணம் (.........)

**3.** (1) பாராளுமன்றம் (2) அழைப்பாணை (3) வழக்கறிஞர் (4) பிரேரணை (.........)

(03 புள்ளிகள்)

- **4** தொடக்கம் **6** வரையான வினாக்களில் நெடுங்கணக்கு அகரவரிசைக்குப் பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**4.** (அ) பள்ளம் (ஆ) பண்டம் (இ) பஞ்சம் (ஈ) பல்லவி
(1) அ, ஆ, இ, ஈ (2) இ, ஆ, ஈ, அ
(3) ஆ, ஈ, அ, இ (4) ஈ, இ, ஆ, அ (.........)

**5.** (அ) பிரசித்தம் (ஆ) பிரமாணம் (இ) பிரவாகம் (ஈ) பிரசாரம்
(1) ஈ, அ, இ, ஆ (2) அ, ஆ, இ, ஈ
(3) ஈ, அ, ஆ, இ (4) ஆ, இ, ஈ, அ (.........)

**6.** (அ) அவலம் (ஆ) அவசியம் (இ) அவசரம் (ஈ) அவமானம்
(1) அ, ஆ, இ, ஈ (2) ஈ, இ, ஆ, அ
(3) ஆ, அ, ஈ, இ (4) இ, ஆ, ஈ, அ (.........)

(03 புள்ளிகள்)

- **7** தொடக்கம் **9** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்தினால் வரும் புணர்மொழியைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**7.** பொன் + தகடு
(1) பொன்தகடு (2) பொற்தகடு (3) பொற்றகடு (4) பொட்டகடு (.........)

**8.** அகம் + கை
(1) அகம்கை (2) அங்கை (3) அகக்கை (4) அம்கை (.........)

**9.** மனம் + நிலை
(1) மனனிலை (2) மனநிலை (3) மனோநிலை (4) மநோநிலை (.........)

(03 புள்ளிகள்)

- வினா **10** இல் மாறியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள சொல் வரும். அதனைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**10.** தி, ய், வு, ஓ, ம், ய (........................)

(01 புள்ளிகள்)

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் திருத்தி மீண்டும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக. சரியாயின் **"சரி"** எனப் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.

**11.** தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையிலே கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

..............................................................................................................................

**12.** சமூகச் சீர்கேட்டைக் கடுமையான சட்டங்களினாலோ தண்டனைகளினாலோ நீக்கி விட முடியாது.

..............................................................................................................................

**13.** பாட்டாளி மக்களின் பிரச்சினைகள் எதுவென முதலாளி வர்க்கத்தினருக்குத் தெரிந்த போதிலும் அதைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

..............................................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

14. பொய்பேசுதலும் களவெடுத்தலும் நற்பழக்கங்கள் அல்ல.

.......................................................................................................................

15. ஒவ்வொரு செய்யுள்களும் ஒவ்வொரு நீதித்தத்துவங்களைக் கூறுகின்றன.

.......................................................................................................................

(05 புள்ளிகள்)

- **16** தொடக்கம் **20** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள மரபுச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. தட்டிக்கொடுத்தல்
    (1) அலட்சியம் செய்தல் (2) சாக்குப்போக்குச் சொல்லல்
    (3) உற்சாகப்படுத்தல் (4) சுத்தப்படுத்தல் (.........)

17. சந்தியில் நிற்றல்
    (1) அவமானம் உண்டாக்கல் (2) ஆதரவின்றியிருத்தல்
    (3) அலைந்து திரிதல் (4) பிச்சையெடுத்தல் (.........)

18. அடியொற்றுதல்
    (1) வரிசையில் செல்லுதல் (2) பின்பற்றல்
    (3) வழிகோலுதல் (4) அத்திவாரமிடல் (.........)

19. காற்றாய்ப்பறத்தல்
    (1) விரைந்து செல்லுதல் (2) கற்பனை செய்தல்
    (3) அலைந்து திரிதல் (4) இலக்கின்றிச் செயற்படல் (.........)

20. பொடி வைத்துப் பேசுதல்
    (1) கோபமாகப் பேசுதல் (2) அலட்சியமாகப் பேசுதல்
    (3) தந்திரமாகப் பேசுதல் (4) உணர்ச்சியோடு பேசுதல் (.........)

(05 புள்ளிகள்)

- **21** தொடக்கம் **23** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றும் தரும் கருத்தினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. "பானையில் இருந்தாற்றானே அகப்பையில் வரும்"
    (1) நெருங்கிய உறவு இருந்தால் தான் நட்பு வளரும்.
    (2) பானைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது அகப்பையாகும்
    (3) அறிவுள்ளவனிடமிருந்து பயனுள்ள கருத்துக்கள் வெளிவரும்.
    (4) ஆராய்ந்து பார்த்துச் செய்தால் தான் நல்ல முடிவு வரும். (.........)

22. "மலைகல்லி எலி பிடிக்கிறது"
    (1) செய்ய முடியாத காரியத்தில் இறங்குதல்
    (2) அரும்பெரும் முயற்சி செய்து அற்ப காரியத்தைச் செய்து முடித்தல்
    (3) முயற்சி செய்தால் எதனையும் சாதிக்கலாம்
    (4) சிறு சிறு சாதனைகளே வெற்றியின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் (.........)

23. "எதார்த்தவாதி வெகுசனவிரோதி"
    (1) அச்சமின்றி உண்மை உரைப்போன் பலரதும் வெறுப்புக்கு ஆளாவான்.
    (2) பிறருடன் வாக்குவாதம் செய்பவன் விரோதத்தைத் தேடிக்கொள்கிறான்.
    (3) உண்மையை மறைக்கும் பொய்யர் பலரதும் வெறுப்புக்குள்ளாவர்.
    (4) நாம் பிறருக்குத் தீங்கு செய்தால் எமக்குத் தீமையே ஏற்படும். (.........)

(03 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

- **24** தொடக்கம் **26** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் ஒத்தகருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**24.** ஆர்வலர்
(1) உபசரிப்போர் (2) அன்புடையோர் (3) நடுநிலையாளர் (4) பரோபகாரிகள் (.........)

**25.** கால்கோள்
(1) தொடக்கம் (2) முடிவு (3) ஈடுபடல் (4) பிற்போடல் (.........)

**26.** தவிசாளர்
(1) பொருளாளர் (2) செயலாளர் (3) தலைவர் (4) காப்பாளர் (.........)

(03 புள்ளிகள்)

- **27** தொடக்கம் **29** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் எதிர்ப்பொருட் சொல்லைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**27.** வள்ளன்மை
(1) தாளாண்மை (2) இவறன்மை (3) காருண்ணியம் (4) இடாம்பிகம் (.........)

**28.** பகிரங்கம்
(1) நிரந்தரம் (2) பிரசித்தம் (3) பரகசியம் (4) அந்தரங்கம் (.........)

**29.** சுதேசி
(1) பரதேசி (2) உபதேசி (3) விதேசி (4) மேதாவி (.........)

(03 புள்ளிகள்)

- **30** தொடக்கம் **32** வரையான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொற்களுடன் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**30.** சுருதி
(1) வேதம் (2) இசை (3) ஒலி (4) சாறு (.........)

**31.** கோதை
(1) மாலை (2) குழந்தை (3) கூந்தல் (4) பெண் (.........)

**32.** ஆழி
(1) கடல் (2) சிங்கம் (3) மோதிரம் (4) வட்டம் (.........)

(03 புள்ளிகள்)

- **33** தொடக்கம் **35** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தனிச்சொல்லைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**33.** ஏழு சீர்களை மாத்திரம் கொண்ட மிகச்சிறிய பா
(1) வெண்பா (2) கலிப்பா (3) குறட்பா (4) குறும்பா (.........)

**34.** குறித்த தினத்தில் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கும்படி ஒருவருக்கு நீதிபதியினால் விடுக்கப்படும் அதிகாரபூர்வக் கட்டளை
(1) பிடியாணை (2) அழைப்பாணை (3) மறுப்பாணை (4) ஆட்கொணர்வு மனு (.........)

**35.** நூலாசிரியர் ஒருவர் தாமியற்றிய நூலின் முன்னே தம் நூலைப்பற்றிக் கூறும் உரை
(1) முன்னுரை (2) அணிந்துரை (3) விதப்புரை (4) பதிப்புரை (.........)

(03 புள்ளிகள்)

36. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.

நம்முடைய சிறு பிரபந்த வகைகளில் தூது, உலா இரண்டும் புகழ் பெற்றவை. தமிழில் தூது நூல்களும் உலா நூல்களும் எண்ணிக்கையில் அதிகம். தமிழில் தூது எனப்படும் இதேவகை நூல்களை சமஸ்கிருதத்தில் "சந்தேசம்" என்பர். காளிதாசன் இயற்றிய "மேக சந்தேசம்" என்னும் "முகில் விடு தூது" பற்றி யாவரும் அறிவர். புகழ் பெற்ற இலக்கியமாகும் அது. ஒருவர் தாம் நேசிக்கும் தலைவர்கள், தெய்வங்கள், வள்ளல்கள், போன்றோரிடம் பாணன், விறலி போன்ற உயர்திணைத் தூதுவர்களையும் கிளி, வண்டு, தென்றல், மேகம் போன்ற அஃறிணைத் தூதுக்களையும் அனுப்புகின்ற வழக்கம் இருந்ததென்று இது வரையில் வெளிவந்துள்ள இவ்வகைப் பிரபந்தங்களிலிருந்து அறிய முடிகிறது. மனத்தையே தூதாக அனுப்புவதும் உண்டு. "நெஞ்சு விடு தூது" என்ற பெயரிலேயே பல பிரபந்தங்கள் உள்ளன. இன்னும் " பணவிடு தூது" "புகையிலை விடு தூது" போன்ற அபூர்வமான பல தூதுக்களும் தமிழில் உண்டு. "கழுதைவிடு தூது" என்று கூட ஒரு நூல் உண்டு.

விறலியைத் தூதாக அனுப்பும் வகையைச் சேர்ந்த "விறலிவிடு தூது" என்ற பிரிவில் ஏராளமான பிரபந்தங்கள் தமிழ் மொழியில் உள்ளன. அச்சானவை பல. அச்சாகாமல் இன்னும் ஏடுகளிலேயே உள்ளனவும் பல. "அழகர் கிள்ளை விடு தூது", "தமிழ் விடு தூது" போன்ற நூல்களுக்கு உள்ள இலக்கியப் பெருமையும், கௌரவமும் விறலிவிடு தூது போன்ற பிரபந்தங்களுக்கு இல்லை என்றாலும் கவர்ச்சி இருக்கின்றது. இக்கவர்ச்சிக்கு காரணம் இப்படி நூல்களிலுள்ள மிகுதியான சிற்றின்ப வருணனைப் பகுதிகளே என்று கூற வேண்டும். முடிவாக நூலின் பிற்பகுதியில் வரும் மனம் திருந்திய தலைவன் தன் பழைய தவறுகளை மனதிற் கொள்ளாது தன்னை ஏற்க வேண்டுமென்று விறலி ஒருத்தியைத் தன்னுடைய மனைவிக்குத் தூதனுப்புவதாய் வரும். முத்தாய்ப்புத் தவிர ஏனைய பகுதிகளில் கணிகையர் உலகில் கட்டவிழ்ந்து போய்ச் சீரழிவது போன்ற வருணனைகளே அதிகம். கெடுவதை முழுமையாகச் சொல்லிவிட்டுப் பின்பு தூதினிறுதியில் மனந்திருந்தி ஒழுக்க வாழ்க்கைக்கும் உயர் குணங்களுக்கும் தலைவன் திரும்புவது போல் முடிப்பது இப்படி நூல்களில் மரபாக இருக்கின்றது. திருந்தித் திரும்பும் பகுதி ஒன்றே நீதிக்குரிய அம்சமாகின்றது.

(i) தூதுப்பிரபந்தம் என்றால் என்ன என்பதற்கு முழுமையானதொரு வரைவிலக்கணம் தருக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(ii) "மேக சந்தேசம்" என்பதன் பொருள் யாது ?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(iii) மிகவும் அபூர்வமாகத் தோன்றிய தூதுப்பிரபந்தங்களாக இங்கு குறிப்பிடப்படுபவை எவை ?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(iv) ஏனைய பிரபந்தங்களோடு ஒப்பிடுகையில் விறலிவிடு தூது பற்றி யாது கூறுவீர் ?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(v) விறலி விடு தூதுப் பிரபந்தம் கூறும் பொருளினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(15 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

37. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை **மூன்றில் ஒரு** பகுதியாகச் சுருக்கி எழுதுக. சுருக்கத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக. சுருக்கத்தின் இறுதியில் **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

கல்வியறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரப் பின்னணியில் வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பினை வழங்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த மனித மூலதனத் தளத்தினை உருவாக்குவதற்கு உயர்ந்த தரமான கல்வி முறையினால் சிறந்த அடித்தளமொன்றினை இடமுடியும். இலவசக்கல்வியை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடப்பாடு கல்வி அடைவில் இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய பல நாடுகளை விட இலங்கை முன்னணியில் இருப்பதற்கு உதவியிருக்கின்றது. இதில் உயர்ந்த செயலாற்றம் காணப்பட்ட போதிலும் பொருளாதாரத்தில் விரைந்து மாற்றமடைந்து வரும் கேள்வியைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கல்வி முறைமை மிக ஆற்றல் வாய்ந்ததாக இருக்க வேண்டியதன் அவசியம் அதிகரித்து வருகின்றது. அனைத்து மட்டங்களிலும் கல்வியை மீள வடிவமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் அரசு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பள்ளிக்கூடங்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அதேநேரம், மாற்றமடைந்து வரும் தொழிலாளர் சந்தையின் போக்குடன் இணைந்து செல்லும் விதத்தில் உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித்துறைகளில் பொருத்தமான மாற்றங்களைச் செய்வதும் அவசியமாகும்.

கல்வியில் சம வாய்ப்புக்களை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதனையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அண்மைய ஆண்டுகளிலும் பல முன்முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நகரப் பிரதேசத்தில் உள்ள சில பள்ளிக்கூடங்களில் மனித மற்றும் பௌதீக மூலவளங்கள் இரண்டும் குவிந்திருந்தமையின் காரணமாக பிரபல்யம் பெற்றிருந்ததுடன் சுற்றி வர இருந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குச் சமனான வாய்ப்புக்களை வழங்க முடியாமைக்கு இத்தகைய முறை வழிவகுத்ததுடன் ஏற்கனவேயுள்ள மூலவளங்களின் குறைப் பயன்பாடும் கல்வியின் தரத்தினை பாதித்தது. கல்வியில் காணப்படும் பிரதேச வேறுபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக " 1000 இரண்டாம் நிலைப் பள்ளிக்கூடங்கள்" என்ற நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் 50இற்கும் குறைவான மாணவர்கள் பயிலும் 1552 பள்ளிக்கூடங்கள் இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அத்தகைய பள்ளிக்கூடங்களில் மாணவர் ஆசிரியர் விகிதம் 5:1 ஆக இருந்த வேளையில் தேசிய மட்டத்தில் இவ்விகிதம் 18:1 ஆக இருந்தது. இது ஏற்கனவேயுள்ள மூலவளங்களை உச்சமட்டத்தில் பயன்படுத்தும் விதத்தில் பள்ளிக்கூடங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அதேவேளையில் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியினை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் காட்டுகின்றது. இதற்கமைய குடித்தொகையின் தேவையை அடிப்படையாகக் கொண்டு 1000 இரண்டாம் நிலைப் பள்ளிக்கூடங்களை மீள் பகிர்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் குறைந்தது 1 AB பாடசாலைகள் மூன்றினைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். இது குறிப்பாக கிராமப் பகுதிகளிலுள்ள கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் உயர் சதவீதத்தினைக் குறைப்பதற்கு உதவும்.

வளர்ந்து வரும் தொழிற்சந்தைச் செல்நெறிகளுக்குப் பொருந்தும் விதத்தில் தகவல் தொடர்பாடல், தொழினுட்பம் கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற வளர்ந்து வரும் முக்கிய துறைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. "கற்றலில் பங்காளர்கள் (Partners in Learning)" மற்றும் "இன்டெல் வேல்ட் எஹெட் (Intel World Ahead)" போன்ற கல்வித்துறைகளில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்திற்கு வலுவூட்டுவதற்காக அரச தனியார் பங்குடைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கம் யாதெனில் மிகச்சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி கணினி மற்றும் மென்பொருட்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதும் பள்ளிக்கூட சமூகத்தினர் அவர்களது அறிவினை இற்றைப்படுத்தலுமாகும். இந்நிகழ்ச்சித்திட்டங்கள் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்குத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் விதத்தில் ஆசிரியர் வாண்மை விருத்தியை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளன. அரசாங்கம் " வாழ்க்கைத் திறனாக ஆங்கிலம்" மற்றும் "சகலருக்கும் ஆங்கிலம்" என்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆங்கிலத் தேர்ச்சி விருத்தியினை ஊக்குவித்துள்ளது. பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன. அவையாவன 10 நாள் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், கற்பித்தல் உபகரண வடிவமைப்பு மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கான நிபுணத்துவ நிலையங்களை நிறுவுதல் என்பனவாகும்.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

[பக். 7 ஐப் பார்க்க

(25 புள்ளிகள்)

38. பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவு செய்து **300** சொற்களில் அமையுமாறு பகுப்பாய்வுக் கட்டுரை எழுதுக.

(அ) ஊடக சுதந்திரமும் சனநாயகமும்.

(ஆ) ஒரு நாட்டிற்கு விதிகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் என்பவற்றின் தேவை.

(இ) உணவில் சுயதேவைப் பூர்த்தி என்பது இன்றைய உலகில் சாத்தியமானதா ?

(ஈ) தனிமனிதனின் அமைதியே உலக சமாதானத்திற்கான அத்திவாரமாகும்.

[பக். 8 ஐப் பார்க்க

(25 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கைச் சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்

# Law College Entrance Examination - Model Paper

## (02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
## பகுதி I - பொது அறிவு
## General Knowledge and Intelligence
## Part I - General Knowledge

ஒரு மணித்தியாலம்
*One hour*

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்குப் பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



* **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்பட்டமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கும் பக். 3 இலும் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

....................................

**சுட்டெண்**

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்.

**முக்கியம் :**

* இவ்வினாத்தாள் **05** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

* எல்லா வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம்** ஆகும்.

* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

* ***உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.***

* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

* கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

* ***தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மையைப் பயன்படுத்தல் பென்சில் பயன்படுத்தி அளித்த விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.***

### பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 15 | |
| 3 | 16 - 30 | |
| 4 | 31 - 43 | |
| 5 | 44 - 50 | |
| | மொத்தம் | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாள்களைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

● 1 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. சமாதான நீதிவான்கள் நியமிக்கப்படுவது.
   (1) சனாதிபதியினால் ஆகும். (2) நீதி அமைச்சரினால் ஆகும்.
   (3) நீதி ஆணைக்குழுவினால் ஆகும். (4) சட்டமா அதிபரினால் ஆகும். (……)

2. இலங்கை மத்திய வங்கி அமைக்கப்பட்ட ஆண்டு எது ?
   (1) 1948 (2) 1949 (3) 1950 (4) 1951 (……)

3. ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டிய நேரடி தொலைபேசி இலக்கம் என்ன ?
   (1) 1919 (2) 1929 (3) 1954 (4) 1956 (……)

4. இலங்கையின் இறுதி ஆளுநராகவும் முதலாவது ஆளுநர் நாயகமாகவும் இருந்தவர் யார் ?
   (1) ஸ்ரீமத் ஹென்றி மன்க் மேசன் மூவர் (2) ஸ்ரீமத் ஒலிவர் குணதிலக
   (3) சோல்பரி சாமி (4) திரு. வில்லியம் கோபல்லாவ (……)

5. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சீர்திருத்தத்தினது 7 ஆவது திருத்த ஆலோசனையின் கீழ் இலங்கையின் 25 ஆவது நிர்வாக மாவட்டமாக நியமிக்கப்பட்டது எந்த மாவட்டமாகும் ?
   (1) முல்லைத்தீவு (2) கிளிநொச்சி (3) அம்பாறை (4) மன்னார் (……)

6. இலங்கையில் உள்ளக நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கையை அதிகளவில் கொண்டமைந்த மாகாணம் எது ?
   (1) வடக்கு (2) வடமத்தி (3) வடமேல் (4) கிழக்கு (……)

7. இலங்கையில் பிறந்த பிரசித்தி பெற்ற விளையாட்டு வீரரான எல்.பீ. றோசா எந்த விளையாட்டுத் துறைக்காக விருதினைப் பெற்றுக் கொண்டார் ?
   (1) பட்மின்ரன் (2) உதைபந்து
   (3) தடகள விளையாட்டுகள் (4) குத்துச்சண்டை (……)

8. இலங்கையில் எந்த அமைச்சுக்கும் **உரித்துடையதல்லாத** அரசாங்க திணைக்களம் பின்வருவனவற்றுள் எது ?
   (1) சுங்கத் திணைக்களம் (2) கணக்காளர் நாயகம் திணைக்களம்
   (3) பொலிஸ் திணைக்களம் (4) குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் (……)

9. இலங்கையில் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளமை என்ன வயதெல்லையை விடக் குறைந்த சிறுவர்களையாகும் ?
   (1) 12 வருடங்கள் (2) 13 வருடங்கள் (3) 14 வருடங்கள் (4) 15 வருடங்கள் (……)

10. 2012 ஆம் ஆண்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கைக்கேற்ப இலங்கையின் தற்போதைய சனத்தொகை தொடர்பான **உண்மையல்லாத** கூற்று பின்வருவனவற்றுள் எது ?
   (1) மொத்த சனத்தொகை 20 277 597 ஆகும்.
   (2) பெண்களின் ஆயுட்கால எதிர்பார்ப்பு 79.59 வருடங்கள்.
   (3) ஆண்களின் எதிர்பார்த்த ஆயுட்காலம் 72.43 வருடங்கள்.
   (4) சனத்தொகை அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 450 ஆகும். (……)

11. இதில் பொருந்தாத சோடி எது ?
   (1) தேவார் சூரியசேன - சங்கீதம் (2) அருட்தந்தை பீற்றர் பிள்ளை - கல்வி
   (3) M.C. சித்திலெப்பை - வர்த்தகம் (4) D.B. தனபால - பத்திரிகைத்துறை (……)

12. இலங்கையில் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டது
   (1) அரேபியர்களால் ஆகும். (2) போர்த்துக்கேயரால் ஆகும்.
   (3) ஒல்லாந்தரால் ஆகும். (4) ஆங்கிலேயர்களால் ஆகும். (……)

13. ஆதிவாசியொருவர் சனாதிபதியாக நியமிக்கப்பட்ட தென் அமெரிக்க நாடு எது ?
   (1) பொலிவியா (2) உருகுவே (3) கொலம்பியா (4) ஈக்குவடோர் (……)

14. அதிக காலம் பழுதாகாது பேணி வைத்திருக்கக்கூடிய தானியவகை இவற்றுள் எது ?
   (1) எள் (2) குரக்கன் (3) சாமை (4) பார்லி (……)

15. மனித அபிவிருத்தி தொடர்பாக இலங்கை உயர் இடத்தைப் பெற்றுக் கொண்டிருப்பது.
   (1) இயற்கை வளங்கள் அதிகமாக இருப்பதனால் ஆகும்.
   (2) உட்கட்டமைப்பு வசதிகள் அதிகளவில் இருப்பதனால் ஆகும்.
   (3) உயர்ந்த மட்டத்தில் அரசின் நலனோம்பல் காணப்படுவதனால் ஆகும்.
   (4) உயர் எழுத்தறிவு காணப்படுவதனால் ஆகும். (……)

[பக். 3 ஐப் பார்க்க

16. உலகின் மிக நீண்ட கடற்கரையோர வலயம் அமைந்த நாடு எது ?
(1) சில்லி (2) ரஷ்யா (3) இந்தியா (4) பிரேசில் (......)

17. சீனாவில் பயன்படுத்தப்படும் பண அலகு எப் பெயரினால் அழைக்கப்படுகிறது ?
(1) பீசோ (2) யென் (3) யுவான் (4) பாத் (......)

18. அண்மையில் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினது அரசாங்க செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார் ?
(1) ஹிலாரி கிளின்டன் (2) ஜோன் மெகேன் (3) ஜோன்கெரி (4) கொண்டலிசா ரைஸ் (......)

19. வளர்ந்த மனிதனொருவனின் உடலில் அமைந்துள்ள முழு எலும்புகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(1) 201 (2) 206 (3) 208 (4) 215 (......)

20. அண்மையில் தனது பதவியில் இருந்து இராஜினமா செய்த புனித 16 ஆவது பாப்பரசர் பெனடிக்ட் ஆண்டகை எந்த இனத்தவராகும் ?
(1) இத்தாலி (2) போலந்து (3) பிரான்ஸ் (4) ஜேர்மன் (......)

21. சிறுவர் உரிமைகளின் பிரகடனத்திற்கமைய "சிறுவர்" எனப்படுபவர்,
(1) 15 வருடங்களை விடக் குறைந்த ஒருவர்.
(2) 16 வருடங்களை விடக் குறைந்த ஒருவர்.
(3) 17 வருடங்களை விடக் குறைந்த ஒருவர்.
(4) 18 வருடங்களை விடக் குறைந்த ஒருவர். (......)

22. இந்தியாவில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பிரசித்தமான நகரம் எது ?
(1) சென்னை (2) பங்களூர் (3) மும்பை (4) திருச்சி (......)

23. "தத்துவவியலாளர்கள் உலகினைப் பற்றி வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். எனினும் உண்மையான பணி உலகை மாற்றுவதாகும் என்பதாகும்". இந்தக் கருத்தைத் தெரிவித்தவர்,
(1) கால்மார்க்ஸ் (2) ரூசோ (3) மா ஓ சேதுங் (4) மகாத்மா காந்தி (......)

24. அரசியல் உலகிலே பல்வேறு தடங்களைப் பதித்துக் கொண்ட தஹ்ரீர் சதுக்கம் அமைந்துள்ள நாடு எது ?
(1) சீனா (2) கிறீஸ் (3) எகிப்து (4) மியன்மார் (......)

25. தற்போதைய விஞ்ஞான தொழினுட்ப விருத்தியின் காரணமாக உலகம் முகங்கொடுத்திருக்கும் முக்கிய பிரச்சினை என்ன ?
(1) வளங்கள் அருகிப் போதல் (2) ஆயுத உற்பத்தி
(3) புவி வெப்பமடைதல் (4) பாரிய நுகர்வு (......)

26. மனித மற்றும் பௌதிக வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக பிரசித்தமான ஆசிய நாடு எது ?
(1) சீனா (2) சிங்கப்பூர் (3) மலேசியா (4) யப்பான் (......)

27. 2012 DA 14 என்பது,
(1) அமெரிக்காவினால் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுத எதிர்ப்பு ஏவுகணை
(2) அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட கனினி வைரசு
(3) அண்மையில் பூமிக்கு அண்மையாக பயணித்த கிரகம்
(4) செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கிய விண்வெளி ஓடம் (......)

28. ஐரோப்பா கண்டத்தை ஆசியாவிலிருந்து பிரிக்கின்ற மலைத்தொடர் எது ?
(1) எவரெஸ்ட் (2) யூரல் (3) அல்ப்ஸ் (4) பிரனீஸ் (......)

29. புருட்டஸ் (Brutus) என்ற பெயருடைய கதாபாத்திரத்தைக் குறிப்பிடும் வில்லியம் சேக்ஷ்பியரின் நாடகம் எது ?
(1) வெனிஸ் நகர வியாபாரி (Merchant of Venice)
(2) யூலியஸ் சீசர் (Julius Caesar)
(3) ரோமியோ மற்றும் யூலியற் (Romeo and Juliet)
(4) ஹமலற் (Hamlet) (......)

30. சுண்ணாம்புக்கல்லில் அடங்கியுள்ள பிரதான இரசாயனப் பதார்த்தம் என்ன ?
(1) கல்சியம் ஒக்சைட் (2) கல்சியம் சல்பேற்று
(3) கல்சியம் காபனேற்று (4) கல்சியம் பொஸ்பேற்று (......)

[பக். 4 ஐப் பார்க்க

● **31** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாக்குமுரிய **விடையைத்** தரப்பட்டுள்ள **வெற்றிடத்தின் மீது** எழுதுக.

31. இலங்கையின் தற்போதைய மொழிக்கொள்கை எப்பெயரினால் அறிமுகஞ்செய்யப்பட்டுள்ளது ?

..............................................................................................................................

32. இலங்கையின் முதலாவது அதிவேக பாதையினது வீதிக் குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

33. யாழ்ப்பாண குடாநாட்டிற்கு மின்சக்தியை வழங்குவதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட சக்தி நிலையத்தின் பெயர் என்ன ?

..............................................................................................................................

34. சர்வதேச நீதிமன்றத்திலே உபதலைவராக கடமையாற்றிய இலங்கை நீதிபதி யார் ?

..............................................................................................................................

35. தேசிய சேவைக்காக இலங்கையில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருதுப் பெயர் யாது ?

..............................................................................................................................

36. உலகில் பெரும்பாலான சர்வதேச ஒழுங்கமைப்புகளினால் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் ஆசிய நாடு எது ?

..............................................................................................................................

37. மேல்நீதிமன்றத்தினால் கீழ் நீதிமன்றத்திற்குப் பொதுவான சட்டரீதியான அலுவல்களைச் செய்து முடிப்பதற்காகச் செய்ய வேண்டிய உத்தரவு எப்பெயரினால் அழைக்கப்படுகிறது ?

..............................................................................................................................

38. உலகில் அதிகளவு எண்ணிக்கையான யாத்திரிகர்கள் ஒன்று சேருவதும் 12வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவதுமான இந்தியாவின் சமய உற்சவம் யாது ?

..............................................................................................................................

39. உலகின் கல்வியைச் சீராக்கும் நிறுவனமாகக் (Clearing house) கருதப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனம் எது ?

..............................................................................................................................

40. மக்களின் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தி பெரிய பிரித்தானியாவிலிருந்து நீக்கப்படுவதற்குக் கருதப்படும் நாடு எது ?

..............................................................................................................................

41. செரினா வில்லியம்ஸ் (Serena Williams) எந்த விளையாட்டினால் பிரபல்யமடைந்தார் ?

..............................................................................................................................

42. 2012 ஆம் ஆண்டிலேயே பெண்களின் கல்வி உரிமைக்காக குரல் எழுப்பியதனால் தலிபான் போராளிகளினால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பாகிஸ்தானிய சிறுமியினது பெயர் என்ன ?

..............................................................................................................................

43. உப்புடன் அயடின் கலப்பது சட்டரீதியாக்கப்பட்டதன் காரணம் யாது ?

..............................................................................................................................

[பக். 5 ஐப் பார்க்க

44. 'ASEAN' என குறும்பெயரால் அறியப்படும் சர்வதேச ஒழுங்கமைப்பினது முழுப்பெயரை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் எழுதுக.

.......................................................................................................................................

45. "ஜாவா" என்ற பெயருடைய கணினி மொழியை உருவாக்கியவர் யார் ?

.......................................................................................................................................

46. கணினி வலையமைப்பை கம்பி இல்லாத இணைப்பு முறைக்கு இணைக்கப்படக்கூடிய தொழினுட்பம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது ?

.......................................................................................................................................

47. கமலஹாசனினால் தயாரிக்கப்பட்ட "விஸ்வரூபம்" திரைப்படத்தை இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளியிடுவதற்கு தற்காலிகத் தடை விதித்தமைக்கான காரணம் என்ன ?

.......................................................................................................................................

48. அண்மையில் மரணமடைந்த சிரேஷ்ட இந்திய சித்தார் இசைக்கலைஞர் யார் ?

.......................................................................................................................................

49. இலங்கையில் ஆட்கொணர்வு மனுக்கட்டளை எந்த நீதிமன்றத்தின் மூலம் பிறப்பிக்கப்படுகிறது ?

.......................................................................................................................................

50. இலங்கை குடியேற்ற நாடாக இருந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக இந்நாட்டின் இடதுசாரி கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட பிரித்தானிய இனத்தவரான தோட்ட உரிமையாளர் யார் ?

.......................................................................................................................................

* **

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கைச் சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சை – மாதிரி வினாத்தாள்

# Sri Lanka Law College Entrance Examination - Model Paper

## (02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
## பகுதி II - நுண்ணறிவு
## General Knowledge and Intelligence
## Part II - Intelligence

ஒரு மணித்தியாலயம்
One hour

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்



* விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பீட்டப்படமாட்டாது.

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இங்கும் பக். 3 இலும் உள்ள புள்ளிக் கோட்டின் மீதும் எழுதுக.

.....................................
சுட்டெண்

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்.

**முக்கியம் :**

* இவ்வினாத்தாள் 08 பக்கங்களில் 50 வினாக்களைக் கொண்டுள்ளது.

* எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.

* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் ஒரு மணித்தியாலம் ஆகும்.

* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

* உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

* கணிப்பானைப் பயன்படுத்தக்கூடாது.

* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

* கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

* தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மையைப் பயன்படுத்தல் பென்சில் பயன்படுத்தி அளித்த விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 11 | |
| 3 | 12 - 20 | |
| 4 | 21 - 25 | |
| 5 | 26 - 31 | |
| 6 | 32 - 35 | |
| 7 | 36 - 45 | |
| 8 | 46 - 50 | |
| மொத்தம் | | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாள்களைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **5** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு சொற்கள்படித் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்சோடிகளும் அவற்றிற்கிடையேயுள்ள ஒவ்வொரு சொற்களுக்குமிடையில் குறிப்பிட்ட தொடர்பைக் காட்டுகின்றன. அவ்வாறான தொடர்பைக் **கொண்டிராத** சொற்சோடியைத் தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. (1) வயல் நிலம் - விளைச்சல் (2) வைத்தியசாலை - சிகிச்சை
(3) பாடசாலை - கல்வி (4) வங்கி - கடன் (.........)

2. (1) அண்ணன் - தம்பி (2) அம்மா - மகன்
(3) தாத்தா - பேரன் (4) மாமி - மருமகள் (.........)

3. (1) மீன் - செட்டைகள் (2) கிளி - சிறகுகள்
(3) மோட்டார் வாகனம் - சக்கரம் (4) படகு - நீர் (.........)

4. (1) யானை - மான் (2) உடும்பு - முதலை
(3) கப்பல் - படகு (4) மெத்தை - தலையணை (.........)

5. (1) நோயாளி - வைத்தியசாலை (2) மாணவன் - பாடசாலை
(3) கைதி - சிறைச்சாலை (4) அநாதை - புனர்வாழ்வு நிலையம் (.........)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள மூன்று சொற்கள் குறித்த இயல்புக்கேற்ப சமனான தொடர்பைக் காட்டுகின்றன. அந்தத் தொடர்பைக் காட்டும் வேறு சொல் ஒன்றை விடைகளில் இருந்து தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

6. மாமி, தந்தை, தாய்
(1) அண்ணா (2) மாமா (3) தம்பி (4) தாத்தா (.........)

7. மலை, சமவெளி, ஆறு
(1) நீரோட்டம் (2) குளம் (3) கடல் (4) பள்ளம் (.........)

8. கைக்குட்டை, சாரம், சட்டை
(1) இடுப்புப்பட்டி (2) கொடி (3) தொப்பி (4) மேற்சட்டை (.........)

9. உருளைக்கிழங்கு, வற்றாளை, கரட்
(1) லீக்ஸ் (2) முள்ளங்கி (3) நிலக்கடலை (4) இஞ்சி (.........)

10. சுவாசப்பை, இருதயம், சிறுநீரகம்
(1) ஈரல் (2) மூளை (3) மூக்கு (4) வாய் (.........)

● **11** தொடக்கம் **15** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் I, II என இரு கூற்றுகளும் அக்கூற்றுகளை அடிப்படையாக கொண்டு பெறக்கூடியதான எதிர்பார்க்கப்படும் A, B என்னும் முடிவுகள் இரண்டும் காட்டப்பட்டுள்ளன. அக்கூற்றுகளோ முடிவுகளோ சில வேளைகளில் உண்மையில்லாது தோன்றக்கூடினாலும் இங்கு அவற்றை உண்மை எனக் கருதுக.

அதற்கேற்ப தரப்பட்ட இரு கூற்றுக்களை மட்டும் கருத்திற்கொண்டு அந்த இரு கூற்றுகளையும் கொண்டு பெறக்கூடிய முடிவுகள் இரண்டிலும்,

* A என்ற முடிவை மட்டும் நிச்சயமாகப் பெற முடியும் எனின் இலக்கம் **1** எனவும்
* B என்ற முடிவை மட்டும் நிச்சயமாகப் பெற முடியும் எனின் இலக்கம் **2** எனவும்
* A, B ஆகிய இரண்டு முடிவுகளையும் நிச்சயமாகப் பெற முடியும் எனின் இலக்கம் **3** எனவும்
* A, B ஆகிய இரண்டு முடிவுகளையும் நிச்சயமாகப் பெற முடியாது எனின் இலக்கம் **4** எனவும்

வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

11. கூற்று : I எல்லாக் கதைப்புத்தகங்களும் செய்தித்தாள்களாகும்.
: II சில செய்தித்தாள்கள் சஞ்சிகைகளாகும்.
**முடிவு** : A சில சஞ்சிகைகள் செய்தித்தாள்களாகும்.
: B சில கதைப்புத்தகங்கள் சஞ்சிகைகளாகும். (.........)

[பக். 3 ஐப் பார்க்க

12. கூற்று : I எல்லா எழுதுவினைஞர்களும் முகாமையாளர்களாவார்கள்.
: II எல்லா முகாமையாளர்களும் ஆசிரியர்களாவார்கள்.
முடிவு : A எல்லா முகாமையாளர்களும் எழுதுவினைஞர்களாவார்கள்.
: B எல்லா எழுதுவினைஞர்களும் ஆசிரியர்களாவார்கள். (.........)

13. கூற்று : I எல்லா கிரிக்கட் வீரர்களும் கரப்பந்தாட்ட வீரர்களாவர்.
: II எல்லா எல்லே விளையாட்டு வீரர்களும் கிரிக்கட் வீரர்களாவர்.
முடிவு : A எல்லே விளையாட்டை விளையாடாத கிரிக்கட் வீரர்கள் இல்லை.
: B கரப்பந்து விளையாட்டை விளையாடாத கிரிக்கட் வீரர்கள் இல்லை. (.........)

14. கூற்று : I சில பேனைகள் பென்சில்களாகும்.
: II சகல பென்சில்களும் புத்தகங்களாகும்.
முடிவு : A சில பேனைகள் பென்சிலைப் போல புத்தகங்களாகும்.
: B சில பேனைகள் புத்தகங்களாகும். (.........)

15. கூற்று : I சில வண்ணாத்துப்பூச்சிகள் பறவைகளாகும்.
: II பறவைகள் அல்லாத வண்ணாத்திப்பூச்சிகள் பல்லிகள் ஆகும்.
முடிவு : A பறவைகள் அல்லது பல்லிகள் அல்லாத வண்ணாத்துப்பூச்சிகளும் உள்ளன.
: B வண்ணாத்துப்பூச்சிகள் அல்லாத பறவைகள் பல்லிகள் இல்லை. (.........)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் ஆரம்பத்தில் குறித்த ஆங்கிலச் சொல் ஒன்று குறித்த முறைக்கேற்ப குறியிடப்பட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளன. அம்முறைக்கேற்ப அதனுடன் தரப்பட்டுள்ள இரண்டாவது சொல்லையும் அதேமுறைக்கு குறியிடப்படும்போது காட்டப்படும் முறையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. CHAIR என்ற சொல் குறியிடப்படும்போது காட்டப்படுவது RIAHC எனின், WHOLE என்ற சொல்லைக் குறியிடும்போது எவ்வாறு காட்டப்படும் ?
(1) EHOLW (2) HWOLE
(3) ELOHW (4) OLEWH (.........)

17. LEVEL என்ற சொல் குறியிடப்படும்போது காட்டப்படுவது OHYHO எனின், DID என்ற சொல்லைக் குறியிடும்போது எவ்வாறு காட்டப்படும் ?
(1) RPR (2) GLG
(3) HLH (4) MAM (.........)

18. ELEPHANT என்ற சொல் குறியிடப்படும்போது காட்டப்படுவது DMDQGBMU எனின், MOUSE என்ற சொல்லைக் குறியிடும்போது எவ்வாறு காட்டப்படும் ?
(1) LPTTD (2) LPTVD
(3) KPTTD (4) LPTVF (.........)

19. BEAR என்ற சொல் குறியிடப்படும்போது காட்டப்படுவது CGDV எனின், HAT என்ற சொல்லைக் குறியிடும்போது எவ்வாறு காட்டப்படும் ?
(1) JCV (2) ICW
(3) IBU (4) KEX (.........)

20. WHERE என்ற சொல் குறியிடப்படும்போது காட்டப்படுவது SDANA எனின், NUT என்ற சொல்லைக் குறியிடும்போது எவ்வாறு காட்டப்படும் ?
(1) JQP (2) KRQ
(3) JRQ (4) KRP (.........)

[பக். 4 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் சட்டக்கல்வி பாடநெறி தொடர்பான நேர அட்டவணையைத் திட்டமிடல் தொடர்பான கீழேயுள்ள தகவல்களைச் சார்ந்துள்ளன.

  ✣ சட்டக்கல்வி தொடர்பான பாடநெறியை நடாத்தி வரும் நிறுவனம் ஒன்றின் நேர அட்டவணையைத் தயாரிக்கும் போது திங்கட்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 வரை ஒரு மணித்தியாலம் வீதம் 6 பாடவேளைகள் 6 பாடங்களை போதிப்பதற்கு கீழேயுள்ளவாறு திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் மாணவர்களின் பிரச்சினைகளைக் கலந்துரையாடும் பொருட்டு ஒரு பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது.

    * கற்பித்தலுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள ஆறு பாடங்களாவன அரசியலமைப்புசட்டம், குடும்பச்சட்டம், காணிச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், நிருவாகச்சட்டம், வணிகச்சட்டம் என்பனவாகும்.
    * ஒப்பந்தச்சட்டம் கற்பிக்கப்படுவது முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 மணிவரை ஆகும்.
    * அரசியலமைப்புச்சட்டம் மற்றும் குடும்பச் சட்டம், காணிச்சட்டம், மற்றும் குடும்பச்சட்டம் ஆகியன கற்பிக்கப்படுவது அடுத்துவரும் இரண்டு பாடவேளைகளிலாகும்.
    * ஒப்பந்தச்சட்டம் மற்றும் வணிகச்சட்டம் ஆகியன ஒரே விரிவுரையாளரால் கற்பிக்கப்படுவதோடு அவர் நிறுவனத்தினுள் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் நிற்கமாட்டார்.
    * வணிகச்சட்டம் ஆனது அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பின்னர் கற்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
    * மாணவர் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக இறுதிப்பாட வேளையைத் தெரிவு செய்ய முடியாது.
    * நண்பகல் 12.00 தொடக்கம் பி.ப 1.00 வரை மதிய உணவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. பிற்பகல் 1.00 - 2.00 வரையிலான நேரம் எதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?
    (1) நிருவாகச்சட்டத்திற்கு
    (2) வணிகச்சட்டத்திற்கு
    (3) காணிச்சட்டத்திற்கு
    (4) மாணவர் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு (.........)

22. முற்பகல் 8.00 - 9.00 வரையிலான நேரம் எப்பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?
    (1) அரசியலமைப்புச்சட்டம் அல்லது குடும்பச்சட்டம்
    (2) அரசியலமைப்புச்சட்டம் அல்லது காணிச்சட்டம்
    (3) குடும்பச்சட்டம் அல்லது காணிச்சட்டம்
    (4) ஒப்பந்தச்சட்டம் அல்லது வணிகச்சட்டம் (.........)


23. முற்பகல் 9.00 -10.00 வரையிலான நேரம் எப்பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?
    (1) அரசியலமைப்புச்சட்டத்திற்கு
    (2) குடும்பச்சட்டத்திற்கு
    (3) காணிச்சட்டத்திற்கு
    (4) நிருவாகச்சட்டத்திற்கு (.........)

24. பிற்பகல் 2.00 - 3.00 வரையிலான நேரம் எதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது ?
    (1) மாணவர் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு
    (2) வணிகச்சட்டத்திற்கு
    (3) நிருவாகச்சட்டத்திற்கு
    (4) அரசியலமைப்புச்சட்டத்திற்கு (.........)

25. முற்பகல் 10.00 - 11.00 வரையிலான நேரம் எப்பாடத்தினைக் கற்பிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?
    (1) அரசியலமைப்புச்சட்டம் அல்லது நிருவாகச்சட்டம்
    (2) குடும்பச்சட்டம் அல்லது காணிச்சட்டம்
    (3) அரசியலமைப்புச்சட்டம் அல்லது காணிச்சட்டம்
    (4) அரசியலமைப்புச்சட்டம் அல்லது வணிகச்சட்டம் (.........)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் குறித்த சங்கமொன்றின் உறுப்பினர்களைக் குறிப்பிடும் கீழேயுள்ள வரிப்படம் மற்றும் அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்துள்ளன.




* இங்குள்ள பெரிய செவ்வகத்தினால் சங்கத்தில் உள்ள பெண்கள் குறிப்பிடப்படுகின்றனர்.
* வட்டத்தின் மூலம் அரசாங்க வேலை செய்யும் உறுப்பினர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.
* பெரிய முக்கோணத்தின் மூலம் 10 வருடங்களை விட பழமை வாய்ந்த உறுப்பினர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.
* சதுரத்தினால் திருமணம் முடித்த உறுப்பினர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

26. திருமணம் முடித்த 10 வருடங்களுக்கு மேலான பழைய உறுப்பினர் **அல்லாத** உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ? (.........)

27. இவ்வுறுப்பினர்களுள் அரசாங்கத்தில் வேலை **செய்யாத** திருமணம் முடித்த பெண்கள் எத்தனை பேர் உள்ளனர் ? (.........)


28. அரசாங்க வேலை **செய்யாத** திருமணம் **முடிக்காத** பெண் உறுப்பினர்கள் எத்தனை பேர் உள்ளனர் ? (.........)

29. அரசாங்கத்தில் வேலை செய்யும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் திருமணம் முடித்த பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு ? (.........)

30. திருமணம் **முடிக்காதவர்களின்** எண்ணிக்கைக்கு உட்பட்ட உறுப்பினர்கள் எத்தனை பேர் ? (.........)

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த கோலமொன்றிற்கேற்ப தயாரிக்கப்பட்ட உள்ள நான்கு உருவப்படங்களுடன் **?** குறியீட்டுடன் தரப்பட்டுள்ளன. அக்கோலத்திற்கேற்றவாறு **?** குறியீட்டுடன் கூடிய இடத்தில் காணப்படக்கூடிய உருவப்படத்தைத் தெரிவு செய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.


31.




1 2 3 4


(.........)

32.




1 2 3 4 (.........)

33.




(1) (2) (3) (4) (.........)

34.



1 2 3 4 (.........)

35.



1 2 3 4 (.........)

[பக். 7 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் சரியான விடையைக் கண்டு அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

36. குறித்த நபர் ஒருவர் கிழக்குத் திசையை நோக்கி 100 மீற்றர் பயணஞ்செய்து இடது பக்கம் திரும்பி 50 மீற்றர் பயணஞ்செய்கிறார். மீண்டும் வலது பக்கம் திரும்பி சரியாக 100 மீற்றர் பயணஞ்செய்த பின்னர் மீண்டும் வலது பக்கம் திரும்பி 50 மீற்றர் பயணஞ்செய்கிறார். தற்போது அவர் இருக்கும் இடம் அமைந்திருப்பது ஆரம்ப இடத்தில் இருந்து எத்தனை மீற்றர் தூரத்திலாகும் ? (.........)

37. சர்மிளன் பிறக்கும்போது அவனுடைய தந்தை சர்மிளனின் சகோதரனை விட 30 வருடங்களாலும் அவனுடைய மாமா சர்மிளனின் சகோதரியை விட 20 வருடங்களினாலும் கூடியவர். சர்மிளனின் மாமா, சர்மிளனின் தந்தையை விட 4 வருடங்களால் இளையவர். சர்மிளனின் சகோதரன் சர்மிளனை விட 5 வருடங்களால் கூடியவர். சர்மிளன் பிறக்கும்போது அவனுடைய சகோதரியின் வயது என்ன ? (.........)

38. கடதாசியொன்றில் A, B, C, D, E என்ற எழுத்துக்கள் ஒரே வரிசையில் ஒழுங்காக எழுதப்பட்டுள்ளன. குறித்தவொரு பிள்ளை A=1, B=2, C=3, D=4, E=5 என்றவாறு இடது பக்கத்தில் இருந்து வலது பக்கம் வரை மீண்டும் D=6, C=7, B=8, A=9 என்றவாறு வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக மீண்டும் B=10, C=11 என்றவாறு இடது பக்கத்தில் இருந்து வலது பக்கம் என்றவாறு அவர் 267 என எண்ணினார். அவர் 267 என எண்ணியது எந்த எழுத்திற்காகவாகும் ? (.........)

39. திரு. சில்வா என்பவர் திரு. பெருமாளிடம் பெற்ற கடன் தொகையினை 10 ரூபா நாணயத்தாள்களின் மூலமும் 50 ரூபா நாணயத்தாள்களின் மூலமும் செலுத்தினார். திரு. பெருமாள் பணத்தினை எண்ணிய போது 200 ரூபாய் குறைந்திருந்ததாக கூறினார், அதற்குக் காரணம் அவர் 10 ரூபாய் தாளினை 50 ரூபாய் தாளாகவும் 50 ரூபாய் தாளினை 10 ரூபாய் தாளாகவும் தவறுதலாகக் கணக்கிட்டு இருந்தமையாகும். கடன்தொகையினைக் கொடுப்பதற்குப் பயன்படுத்திய மொத்த பணத்தாள்களின் எண்ணிக்கை 35 எனின் திரு. சில்வா செலுத்த வேண்டிய கடன்தொகை எத்தனை ரூபாய்களாகும் ? (.........)

40. பூனை ஒன்று 40 அடி உயரமான தூண் ஒனறின் உயரத்தினை அடைவதற்கு முயற்சித்தது. தூணின் உச்சியை அடையும் வரை அது ஒரே வேகத்தைப் பேணிக் கொண்டு சென்றது. ஒவ்வொரு 2 நிமிடத்திலும் அது 10 அடி என்றவாறான உயரத்தில் தூணின் மேல் ஏறும். 10 அடி உயரத்திற்கு ஏறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது 4 அடி கீழே வழுக்கி வந்தது. தூணின் உச்சியை அடையும் போது அதற்கு எவ்வளவு நிமிடம் எடுத்து இருக்கும் ? (.........)

- **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த தொடர்புக்கேற்ப தயாரிக்கப்பட்ட எண்சோடி ஒன்றுப்படி தரப்பட்டுள்ளது. அந்தத் தொடர்பினை விளங்கி அக்கோலத்திற்கேற்ப ? என்ற குறியீட்டினால் காட்டப்படும் இடத்திற்கு இடுவதற்கு மிகவும் பொருத்தமான எண்ணைக் கண்டறிந்து அந்த **எண்ணை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

41.

| | | |
|---|---|---|
| 8 | 27 | 3 |
| 5 | 36 | 6 |
| 7 | 24 | 3 |
| 9 | ? | 6 |

(.........)

42.

| | | |
|---|---|---|
| 8 | 40 | 13 |
| 7 | 14 | 9 |
| 10 | 40 | 14 |
| 5 | ? | 12 |

(.........)

43.

| | | |
|---|---|---|
| 4 | 52 | 6 |
| 3 | 58 | 7 |
| 6 | 40 | 2 |
| 8 | ? | 3 |

(.........)

44.

| | | |
|---|---|---|
| 4 | 23 | 5 |
| 8 | 45 | 7 |
| 2 | 24 | 5 |
| 6 | ? | 9 |

(.........)

45.


| | | |
|---|---|---|
| 12 | 35 | 13 |
| 7 | 28 | 11 |
| 9 | 33 | 14 |
| 11 | ? | 15 |

(.........)

[பக். 8 ஐப் பார்க்க


- **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த பொதுவான கோலத்திற்கு எண்கள் இடப்பட்ட நான்கு உருவப்படங்களின்படி தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப ? என்ற இடத்திற்கு இடுவதற்கு மிகவும் பொருத்தமான எண்ணினைக் கண்டறிந்து அந்த **எண்ணை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

46.





(.........)

47.





(.........)

48.





(.........)

49.




(.........)

50.




(.........)

***